# இலங்கை வங்கி

உலகளாவிய அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாகவும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 500 மிகப் பெரிய வங்கிகளுள் ஒன்றாகவும் தரப்படுத்தப்பட்டுள்ள அரச வர்த்தக வங்கியும் இலங்கையின் 1ம் தர வங்கியுமாகிய இலங்கை வங்கியின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமையும் ஆற்றலும் ஊக்கமும் அனுபவமும் கொண்ட இளம் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## கணக்காய்வு உதவியாளர் பயிலுநர்

### தேவைப்படும் தகைமைகள்

➢ **இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.**

➢ **கல்வித் தகைமைகளும் அனுபவமும்**

- க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் ஒரே அமர்வில் குறைந்தபட்சம் 03 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**மற்றும்**

- க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஒரே அமர்வில் (பொது ஆங்கிலம், பொது அறிவு தவிர) 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

**மற்றும்**

- இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் (ICASL) சான்றிதழ் பெற்ற வியாபாரக் கணக்காளராக (CBA) இருத்தல் வேண்டும்.

**மற்றும்**

- இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் (ICASL) அல்லது இலங்கை மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிதி நிறுவனம் ஒன்றால் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு நிறுவனம் ஒன்றில் 02 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம்.

❖ மேற்குறித்த தகைமைகளுக்கு மேலதிகமாக இலங்கை வங்கியாளர் நிறுவகத்தின் (IBSL) CBF/IABF பரீட்சைகளில் சித்தியடைந்துள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

➢ **ஏனைய தகைமைகள்**

- ஆங்கிலம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழிகளில் தொடர்பாடும் திறன்.
- குறைந்தபட்ச மேற்பார்வையின் கீழ் சுயாதீனமாகத் தொழிற்படும் ஆற்றல்.
- கணனி அறிவும் தகவல் தொழில்நுட்பம்சார் கணக்காய்வு உத்திகளும்.
- குழுவாகச் செயற்படும் ஆற்றலுடன் பிறருடன் பழகும் பண்புகளையும் கொண்டிருத்தல்.
- அழுத்தமிகு சூழ்நிலைகளிலும் வேலை செய்யக்கூடிய ஆற்றல்.

➢ **வயது**

- விண்ணப்ப முடிவுத் திகதியில் 26 வயது அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

### விதிகள் மற்றும் நிபந்தனைகள்

- பயிற்சிக்காலம் 02 ஆண்டுகளாகும் இப்பயிற்சிக் காலத்தில் மாதாந்த பயிற்சிக் கொடுப்பனவொன்று (முதலாம் வருடம் ரூபா 45,000 மற்றும் இரண்டாம் வருடம் ரூபா 60,000) வழங்கப்படும்.
- இப்பதவி வங்கிச் சேவையின் பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய காணப்படினும் சாதாரண வங்கியியல் துறைக்குப் புறம்பானதாகும் (மூடிய சேவை).
- பயிற்சிக் காலத்தில் ஆற்றிய சேவையில் வங்கி திருப்தியடையும் பட்சத்தில் கணக்காய்வு உதவியாளர் -1 என்ற தரத்தில் நிரந்தர ஆளணியில் உறுதிப்படுத்தப்படுவர்.
- வங்கியின் தேவைக்கேற்ப நாட்டினது எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராகவிருத்தல் வேண்டும்.
- வழமையான வங்கி வேலை நேரத்திற்குப் பிறகும் வார இறுதி நாட்கள்/விடுமுறை நாட்களிலும் பணிபுரியக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- பெரும் முன்னறிவித்தல்களேதும் வழங்கப்படாதபோதும் நாட்டின் எப்பாகத்துக்கும் பயணம் செய்யக் கூடியவராக இருத்தல்.

### தெரிவு நடைமுறை

- போட்டிப் பரீட்சையினைத் தொடர்ந்து பட்டியற்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.
- போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் நேர்முகத்தேர்வுக்குத் தகுதிபெறும் விண்ணப்பதாரிகளைப் பட்டியற்படுத்த மட்டுமே பயன்படுத்தப்படும்.
- மாகாண ரீதியாக அல்லது வங்கியின் தற்றுணிபின் அடிப்படையில் தெரிவு இடம்பெறும்.

### விண்ணப்பிக்கும் முறை

உங்களது சுயவிபரக் கோவையினை **www.boc.lk** என்ற எங்களது இணையத்தள முகவரியூடாக (**careers** என்ற பகுதியின் கீழ்) தரவிறக்கம் செய்யக்கூடிய மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக பூர்த்தி செய்து உறவுமுறையைசாராத இரண்டு நபர்களின் தொடர்பு விபரங்களுடனும் பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள், அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணங்கள் என்பவற்றின் பிரதிகளுடனும் **13.08.2022ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கும் வகையில் கீழ்க்காணும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடவும்.

விண்ணப்பத்தின் முடிவுத் திகதியில் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தொடர்புடைய சான்றிதழ்களின் நிழற்பிரதிகளைக் கொண்டிராத அல்லது உண்மைக்குப் புறம்பாக தகவல்களைக் கொண்ட அல்லது விண்ணப்ப முடிவுத் திகதியிற்குப் பின்பு கிடைக்கப்பெறும் எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்பின் எந்தக் கட்டத்திலும் நிராகரிக்கப்படும்.

**பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பும் தொழில் அபிவிருத்தியும்)**
**இலங்கை வங்கி,**
**மனித வளப் பிரிவு,**
**26ஆவது மாடி, தலைமை அலுவலகம்,**
**"இலங்கை வங்கிசதுக்கம்",**
**இல.01, இலங்கை வங்கி மாவத்தை,**
**கொழும்பு-01.**

*தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.*

*தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.*

*நிரப்பப்படவுள்ள பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பை பிற்போடும்/இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்க உண்டு.*

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்